**மே – 26**

# TNPSC துளிகள்

- ❖ அசாம் மாநில அரசானது, அசாமி மொழியில் தகவல்களை வழங்கக் கூடிய 'அங்கிதா' என்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான செய்தி வாசிப்பாளரை அறிமுகப் படுத்தியுள்ளது.
  - ○ பிராந்திய மொழியில் செயல்படும் இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு செய்தி வாசிப்பாளர் இதுவாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கோயம்புத்தூர் மாநகராட்சிக் கூட்டத்தில் போதுமான குறைந்தபட்ச அளவில் இல்லாத வருகை




- ❖ வழக்கமாக, மன்றக் கூட்டமானது காலை 10.30 மணிக்கு தொடங்கும்.
- ❖ ஆனால் மொத்தமான 100 தொகுதிகளில்/வார்டுகளில் 25 சதவீதத்திற்கும் குறைவான அளவிலான உறுப்பினர்களே வருகை தந்திருந்தனர்.
- ❖ எனவே, அங்கு மாதாந்திர மன்றக் கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்ற உதவுவதற்காக வேண்டி மேயர் உடனிருந்த சிறிய எண்ணிக்கையிலான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- ❖ வழக்கமாக, மேயர், வழக்கமான உரைக்குப் பிறகு, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அறிவிப்பார், அதைத் தொடர்ந்து ஐந்து மண்டலத் தலைவர்களும் அது குறித்து தங்கள் குறைகளை தெரிவிப்பார்கள்.
- ❖ பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுவார் என்ற நிலையில் அதன் பின், மற்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள்.

- அதிகாரிகள் தெரிவித்த படி, இந்தத் தீர்மானங்கள் "மிக முக்கியமானவை" என்றும், அவை மன்றத்திடமிருந்து ஒப்புதல் பெற வேண்டியிருந்ததாகவும் உள்ளது.
- இவற்றிற்கு மட்டுமே நகரில் சாலைகள் அமைப்பதற்கான நிதி ஒப்புதல் கிடைக்கும்.
- இருப்பினும், மேயர் அந்தத் தீர்மானங்களை அங்கு முன் வைத்த போது, எதிர்க்கட்சி மன்ற உறுப்பினர் /கவுன்சிலர், அவையில் குறைந்த பட்ச உறுப்பினர் வருகை இல்லாத போது அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவது சரியானதல்ல என்று கூறி அவற்றை எதிர்த்தார்.
- பொதுவாக, கேள்வி நேரம் சுமார் 120 நிமிடங்கள் அல்லது அதற்கு மேல் நடைபெறும்.
- இருப்பினும், அந்த மன்ற உறுப்பினர்களில் /கவுன்சிலர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவானவர்கள் இருந்ததால், கூட்டம் 70 நிமிடங்களுக்குள் முடிவடைந்தது.

## குறைதீர்ப்பாளரின் இருப்பு




- உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து மட்ட அலுவலகங்களிலும் குறைதீர்ப்பாளரின் இருப்பு பிரதானமாகக் காட்டப் படுவதை நன்கு உறுதி செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு ஆனது நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் விநியோகத் துறை செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.
- தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் குறைதீர்ப்புச் சட்டம் 2014 ஆம் ஆண்டில் இயற்றப் பட்டது.
- இந்தச் சட்டமானது, உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிரான புகார்களைத் தீர்ப்பதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையை மிகவும் உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.
- உள்ளாட்சி அமைப்புகளின் அரசு ஊழியர்கள் மீதான ஊழல், முறைகேடுகள் அல்லது தவறான நிர்வாகம் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு குறைதீர்ப்பாளர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.
- எந்தவொரு அரசு ஊழியரும் ஊழல், பாரபட்சம், வாரிசுச் சலுகை அல்லது பதவி ஆதாயத்திற்காக தனது பதவியை துஷ்பிரயோகம் செய்தால், குறைதீர்ப்பாளர் அந்தப்

புகாரை ஏற்றுக் கொண்டு சட்டத்தின் கீழ் வழங்கப் பட்டுள்ள படி அது குறித்து முடிவு செய்வார்.

### திருவாடுகூர் புராணம்




- சரஸ்வதி மகால் நூலகத் தமிழ் பண்டிதர் மணிமாறன் தலைமையிலான வரலாற்று ஆசிரியர்கள் குழுவானது, சோழர்காலத் தமிழ் படைப்பான திருவாடுகூர் புராணத்தின் பொருள் கண்டுணர்ந்துள்ளது.
- இது கடலூர் மாவட்டத்தில் உள்ள திருக்கண்டீஸ்வரமுடையார் கோவிலில் காணப் படும் கல்வெட்டுகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.
- இக்கல்வெட்டுகளின் பொருள் கண்டுணர்தலில், வடுகூரில் உள்ள சைவக் கோயிலின் 'ஸ்தல புராணம்' அல்லது 'வடுகூர் புராணம்' என்பதினை 'வனதிபன்' என்ற ஒரு நபர் உருவாக்கியதாக தெரிய வந்தது.
- திருஞானசம்பந்தர் பாடிய 'தேவாரம்' பாடல்களில் இது குறிப்பிடப் பட்டுள்ளது.
- இருப்பினும், 'வடுகூர் புராணம்' தாங்கிய பனை ஓலைச் சுவடிகளோ அல்லது செப்புத் தகடுகளோ தற்போது வரை கிடைக்கவில்லை.

## தேசியச் செய்திகள்


### 1 கோடி பயனர்கள் - iGOT கர்மயோகி

- iGOT கர்மயோகியானது, 1 கோடி பதிவுகளைத் தாண்டியுள்ளதாக மத்தியப் பணியாளர் அமைச்சகம் அறிவித்துள்ளது.
- பயனாளர் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் 5 இடங்களில் உள்ள மாநிலங்கள் பீகார், ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியனவாகும்.
- இது 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெறும் 3 லட்சம் பயனாளர்களில் இருந்து உயர்ந்துள்ளது என்ற நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இது 30 மடங்கு வளர்ச்சி ஆகும்.
- iGOT கர்மயோகி என்பது கர்மயோகித் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த அரசு இயங் கலை வழிப் பயிற்சியைக் குறிக்கிறது.

- இது தேசிய குடிமைப் பணிகள் பயிற்சித் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் (NPCSCB) கீழ் தொடங்கப் பட்டது.
- இது திறம் மிக்க, தொழில்முறை மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக உள்ள குடிமைப் பணிச் சேவையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

iGOT
Integrated Government Online Training

## 'சுடுபி காடுகள்' குறித்த உச்ச நீதிமன்ற உத்தரவு




- உச்ச நீதிமன்றமானது மகாராஷ்டிராவின் கிழக்கு விதர்பா பகுதியில் உள்ள 'சுடுபி புதர் நிலக் காடு' நிலங்களை 1996 ஆம் ஆண்டின் தீர்ப்பின் படி காடுகளாக அறிவித்து உள்ளது.
- 1996 ஆம் ஆண்டு தீர்ப்பானது, வனம் சாராதப் பயன்பாடுகள் தொடர்பான தமிழ்நாடு கோதவர்மன் தீர்ப்புடன் தொடர்புடையது.
- மத்திய அரசின் ஒரு முன் ஒப்புதல் இல்லாமல் இத்தகைய மாற்றங்களை மேற்கொள்ள முடியாது.
- வனப்பகுதிகளின் பட்டியலிலிருந்து அவற்றை நீக்குவதற்கு 1980 ஆம் ஆண்டு மாநில அரசானது வன (பாதுகாப்பு) சட்டத்தின் (FCA) கீழ் ஒப்புதல் பெற வேண்டும்.

- ஒரு சுடுபி காட்டு நிலத்தின் (பிராந்தியத்திற்குத் தனித்துவமானது) பயன்பாடு குறித்து இன்று வரை எந்தத் தெளிவும் இல்லை.
- சுடுபி என்பது புதர்கள் என்று பொருள்படும் ஒரு மராத்தி சொல்லாகும் என்பதோடு "சுடுபி" நிலங்கள் என்பது புதர் வளர்ச்சியுடன் கூடிய தரம் குறைந்த ஆக்கிரமிக்கப் படாத நிலங்களைக் குறிக்கிறது.

## சாகர் பவன் மற்றும் போலார் பவன்




- கோவாவில் உள்ள தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையத்தில் போலார் பவன் மற்றும் சாகர் பவன் ஆகியவை திறக்கப்பட்டுள்ளன.
- இவை இந்தியாவில் இத்தகைய ரீதியில் முதல் வகையானது என்பதோடு உலகின் மிகச் சிலவற்றில் ஒன்றாகவும் விளங்குகின்றன.
- இது புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் கீழ் வருகிறது.
- போலார் பவன் ஆனது, இறுதியில் இந்தியாவின் முதல் துருவ மற்றும் பெருங்கடல் அருங்காட்சியகத்தின் தாயகமாகச் செயல்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## CPEC விரிவாக்கத்தில் ஆப்கானிஸ்தான்

- சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் (CPEC) ஆனது, ஆப்கானிஸ்தானுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் ஆனது, சீனாவின் மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பின் கீழ் ஒரு முக்கிய முயற்சி ஆகும்.
- இது பாகிஸ்தான் நாட்டின் குவாதர் துறைமுகம் வழியாக சீனாவிற்கு வர்த்தக வழித் தடங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- CPEC ஆனது, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாக செல்வதால் இந்தியா அதை கடுமையாக விமர்சித்து வருகிறது.

- இந்தத் திட்டத்தில் CPECயும் அடங்கும் என்பதால், சீனாவின் மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பினை இந்தியாவும் எதிர்க்கிறது.





## இந்தியப் பெருங்கடல் விளிம்போர நாடுகள் சங்கத்தின் (IORA) 24வது கூட்டம்




- IORA நாடுகளின் அமைச்சர்கள் குழுவின் 24வது கூட்டம் ஆனது, IORA அமைப்பின் தலைமைப் பொறுப்பில் உள்ள இலங்கையினால் காணொளி வாயிலாக நடத்தப் பட்டது.
- "Sustainable Indian Ocean for Future Generation" என்பது இந்தக் கூட்டத்தின் கருத்துருவாகும்.
- இதில் 22 IORA உறுப்பினர் நாடுகளும், IORA அமைப்பின் 12 பேச்சுவார்த்தைப் பங்குதார நாடுகளும் பங்கேற்றன.
- உறுப்பினர் நாடுகள் 'கொழும்பு கூட்டறிக்கையை' ஏற்றுக் கொண்டன.
- இந்தியா தற்போது IORA அமைப்பின் துணைத் தலைமைப் பொறுப்பிலும், மும்மைத் தலைமைகளின் ஒரு பகுதியாகவும் உள்ளது.

- IORA அமைப்பின் 2025-2027 ஆம் ஆண்டிற்கான தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்க உள்ளது.

### சாகோஸ் தீவுகளை ஒப்படைப்பது குறித்த ஐக்கியப் பேரரசின் முடிவு





- முக்கியத்துவம் வாய்ந்த டியாகோ கார்சியா இராணுவத் தளம் அடங்கிய சாகோஸ் தீவுகளின் இறையாண்மையை மொரீஷியஸுக்கு மாற்றும் ஒப்பந்தத்தில் ஐக்கியப் பேரரசு கையெழுத்திட்டது.
- இந்தியப் பெருங்கடலில் ஐக்கியப் பேரரசு-அமெரிக்கப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் டியாகோ கார்சியா இராணுவத் தளம் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- இந்தத் தளமானது, தற்போது மொரீஷியஸிடமிருந்து 99 ஆண்டு கால அளவிலான ஒரு புதிய குத்தகையின் கீழ் குத்தகைக்கு விடப்படும்.
- மொரீஷியஸுக்கு ஆண்டிற்குச் சராசரியாக 101 மில்லியன் பவுண்ட் (129 மில்லியன் டாலர்) வழங்கும்.
- பிரிட்டிஷ் பேரரசின் கட்டுப்பாட்டின் இருந்த கடைசிப் பகுதிகளில் ஒன்றான சாகோஸ் தீவுகள் 1814 ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் உள்ளன.
- பிரிட்டன் ஆனது, மொரீஷியஸ் சுதந்திரம் பெறுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 1965 ஆம் ஆண்டில் மொரீஷியஸிலிருந்து சாகோஸ் தீவுகளைப் பிரித்து, பின் பிரிட்டிஷ் இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தினை உருவாக்கியது.
- 2019 ஆம் ஆண்டின் பிணைப்பு சாராத ஒரு கருத்தில், சர்வதேச நீதிமன்றம் ஆனது ஐக்கியப் பேரரசானது சட்ட விரோதமாக மொரீஷியஸைப் பிரித்ததாக தீர்ப்பளித்தது.
- ஐக்கியப் பேரரசின் முடிவை இந்தியாவும் வரவேற்கிறது.

## பொருளாதாரச் செய்திகள்

### 103 அம்ரித் பாரத் இரயில் நிலையங்கள்

- 18 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள சுமார் 86 மாவட்டங்களில் புதுப்பிக்கப் பட்ட/ மறுமேம்படுத்தப்பட்ட 103 இரயில் நிலையங்கள் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அம்ரித் பாரத் இரயில் நிலையத் திட்டம் ஆனது, இரயில் நிலையங்களை நன்கு மேம்படுத்துவதற்கும் அவற்றை "நகர மையங்களாக" மேம்படுத்துவதற்குமான ஒரு நீண்டகாலத் திட்டமாகும்.

- இந்தத் திட்டத்தின் கீழ் மறுமேம்பாடு செய்யப் படுவதற்காக வேண்டி மொத்தம் 1,300 நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இவற்றில் 157 நிலையங்கள் உத்தரப் பிரதேசத்திலும், 132 நிலையங்கள் மகாராஷ்டிர மாநிலத்திலும், 101 நிலையங்கள் மேற்கு வங்காளத்திலும் உள்ளன.
- அமிர்த பாரத் திட்டத்தின் கீழ் ஒன்பது தமிழ்நாடு இரயில் நிலையங்கள் புதுப்பிக்கப் பட்டுள்ளன.
- அவற்றில்,
    - சென்னை கோட்டத்தில் உள்ள பரங்கிமலை/செயிண்ட் தாமஸ் மவுண்ட் இரயில் நிலையம்
    - சேலம் கோட்டத்தில் உள்ள சாமல்பட்டி நிலையம்
    - திருச்சி கோட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் நிலையம்
    - போளூர்
    - சிதம்பரம்
    - விருத்தாசலம்
    - மன்னார்குடி
    - கன்னியாகுமரியில் உள்ள குளித்துறை நிலையம்
- ஸ்ரீரங்கம் நிலையத்தின் வடிவமைப்பானது இரங்கநாத சுவாமி கோயிலின் வடிவிலும், திருவண்ணாமலை நிலையம் திராவிடக் கட்டிடக்கலை வடிவிலும் அமைக்கப் பட்டு உள்ளன.





# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சர்வதேச புக்கர் பரிசு 2025 வெற்றியாளர்

- கன்னட எழுத்தாளர் பானு முஷ்டாக்கின் "Heart Lamp" 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச புக்கர் பரிசை வென்றுள்ளது.

- இதனை தீபா பாஸ்தி மொழி பெயர்த்துள்ளார்.
- கன்னட மொழியில் இப்பரிசினை வென்ற முதல் புத்தகம் இதுவாகும்.
- வரலாற்றில் ஒரு சிறுகதைத் தொகுப்பிற்கு இந்த விருது வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இவ்விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரெஞ்சு, இத்தாலிய, டேனிய மற்றும் ஜப்பானிய மொழிப் புத்தகங்களில் ஒன்றாக இது இடம் பெற்றுள்ளது.
- இந்திய எழுத்தாளருக்கான இந்த விருது, கீதாஞ்சலி ஸ்ரீ டெய்சி ராக்வெல் என்பவரால் இந்தி மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட டோம்ப் ஆஃப் சாண்ட் என்ற ஒரு புத்தகத்திற்காக என்று இந்த விருதினை வென்ற மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு இந்தியர் இந்த விருதினைப் பெற்றுள்ளார்.
- ஒரு கன்னட எழுத்தாளருக்குப் புக்கர் நிறுவனங்களால் விருது வழங்கப்படுவது இது இரண்டாவது முறையாகும்.
- முதல் முறையாக 2013 ஆம் ஆண்டில் U.R.அனந்தமூர்த்தியின் படைப்புகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டது.
- இதற்கிடையில், பாஸ்தி இந்தப் பரிசை வென்ற முதல் இந்திய மொழிபெயர்ப்பாளர் ஆனார்.
- 2024 ஆம் ஆண்டில் அதே படைப்புக்காக வேண்டி ஆங்கில PEN அமைப்பின் 'PEN மொழி பெயர்ப்புகள்' விருதை வென்றார்.




# இதரச் செய்திகள்

## குட்டலா சிற்பக் கல்வெட்டு

- கர்நாடக மாநிலத்தின் ஹாவேரி மாவட்டத்தில் உள்ள குட்டலாவில் உள்ள சந்திரசேகர கோயிலுக்கு அருகில் ஒரு சிற்பக் கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது.
- உள்ளூர் பகுதியில் வறட்சி காரணமாக 6,307 பேர் உயிரிழந்ததை இது ஆவணப்படுத்தி உள்ளது.
- இதனால், இந்தியாவில் இயற்கைப் பேரழிவால் ஏற்பட்ட மனிதப் பேரழிவின் முதல் வரலாற்றுப் பதிவாக இது அமைந்தது.
- இது இந்திய வரலாற்றில் கல்வெட்டு ரீதியாக ஆவணப்படுத்தப் பட்ட மிகவும் பெரிய அளவிலான இயற்கைப் பேரழிவுகளில் ஒன்றாகவும் இது குறிக்கப் படுகிறது.

- சாகா 1461, விகாரி, பத்ரபாதா சு.5 தேதியிட்ட இந்தக் கல்வெட்டு ஆனது கி.பி. 1539 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதியினை ஒத்திருக்கிறது.
- இது கன்னட மொழி மற்றும் எழுத்துக்களில் உள்ளது.
- இங்கு இறந்தவர்களின் உடல்கள் குட்டவாலாலாவைச் சேர்ந்த நானிதேவா ஒடேயா என்பவரின் மகன் மருளைய்யா ஒடேயாவா என்பவரால் அடக்கம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடுகிறது.
- அதன் ஆட்சியாளர் திம்மரச சுவாமிக்கு மரியாதை செலுத்திப் புண்ணியம் ஈட்டச் செய்வதற்காக உயிரிழந்தவர்களை அவர் கூடைகளில் புதைத்தார்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★